பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 04 | செவ்வாய்க்கிழமை | 19.11.2024 | அதிர்வு 109

**இலங்கையில் இருந்து கடத்தப்பட்ட**

## நாலரைக் கிலோ தங்கம் இந்தியாவில் சிக்கியது!

**(ந.லோகதயாளன்)**

இலங்கையில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட 4.5 கிலோ தங்கம் இந்தியாவின் இராமேஸ்வரத்தில் நேற்று திங்கட்கிழமை பிடிபட்டுள்ளது. 05

# ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான அறைகூவலே பொதுத் தேர்தல் முடிவுகள்

## புதிய அமைச்சரவை பதவிப்பிரமாண நிகழ்வில் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

**“நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான அறைகூவல் ஆகும். அந்த மக்களுக்குச் சுதந்திரம் அவசியமாகும்.”**

**- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.** 05



# கற்கோவளம் இராணுவ முகாமை உடனடியாக அகற்றுமாறு உத்தரவு

## உரிமையாளர்களிடம் காணியை ஒப்படைக்குமாறு பணிப்பு



**(ந.லோகதயாளன்)**

பருத்தித்துறை, கற்கோவளம் இராணுவ முகாமை 14 நாட்களுக்குள் அகற்றி காணியை உரிமையாளர்களிடம் ஒப்படைக்குமாறு இராணுவத் தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

மூவருக்குச் சொந்தமான 3 ஏக்கர் காணியையே விடுவிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நேற்று திங்கட்கிழமை 05




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து தாம் ராஜினாமாச் செய்து விட்டார் எனத் தெரிவித்து, அதனால் கட்சித் தலைமைப் பதவியை ஏற்கும்படி சிறிதரனைக் கோரி, மாவை சேனாதிராஜா எழுதிய கடிதம் தொடர்பில், தொடர் நடவடிக்கைகளை எடுக்கத் தமிழரசுக் கட்சி தீர்மானித்திருக்கின்றது.

இது பற்றிய முடிவை கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் அரசியல் குழு கூட்டத்தில் தெரிவித்திருக்கின்றார்.

தேர்தல் சமயத்தில் அப்படி தலைமைப் பதவியை விட்டு விலகுகிறார் என மாவை சேனாதிராஜா தம்பாட்டில் அறிவித்தமை கட்சிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியதாகத் தெரிவித்து அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் மாவை சேனாதிராஜாவைக் கடுமையாக வைதனர். ஆயினும் அவை எவற்றுக்கும் உருப்படியான பதில் எதையும் வழங்காமல் மாவை சேனாதிராஜா அக்கூட்டத்தில் சிவனே என்று 05





# வட மாகாண ஆளுநரைச் சந்தித்த வட பிராந்திய கட்டளைத் தளபதி

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை இலங்கைக் கடற்படையின் வட பிராந்திய கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் துஷார கருணதுங்க நேற்று திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது யாழ். தீவுப் பகுதி மக்களின் கடல் போக்கு வரத்து மற்றும் தீவுகளில் வசிக்கும் மக்களுக்கான வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கைக் கடற் படை முன்னெடுத்துள்ள செயற்பாடுகளின் முக்கியத்துவம் தொடர்பாக ஆராயப்பட்டது.

# அரிசி இறக்குமதி செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை



அரிசி பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் 2 மாதங்களுக் குத் தேவையான அரிசியை இறக்குமதி செய்யுமாறு அகில இலங்கை மொத்த மற்றும் சில்லறை அத்தியாவசிய உணவு வர்த்தகர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

பாரியளவான வர்த்தகர்களைப் பாதுகாக்காமல் மக்களைப் பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என அந்த சங்கம் கோரியுள்ளது.

இதனிடையே தற்போது, சந்தையில் நாடு அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதனுடன், சில பல்பொருள் அங்காடிகள் நாட்டு அரிசி விற்பனையை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன.

அதன்படி மேற்படி அங்காடிகளில், நாளொன்றுக்கு ஒருவர் 3 கிலோ கிராமிற்கு அதிகமாக அரிசியைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் இல்லை எனத் தெரிவிக்கப்படு கிறது.

அதேநேரம், சில வர்த்தக நிலையங்கள் அரிசியைப் பணத்திற்கு மாத்திரம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத் துள்ளன.





# ரவி, நாமல், சத்தியலிங்கம் ஆகியோரின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியீடு

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக ரவிகருணா நாயக்க, நாமல் ராஜபக்ஷ மற்றும் பி. சத்தியலிங்கம் ஆகியோரின் பெயர்களை அறிவித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

ரவிகருணாநாயக்க புதிய ஜனநாயக முன்னணியிலிருந்தும், நாமல் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்தும், பி. சத்தியலிங்கம் இலங்கை தமிழரசு கட்சியிலிருந்தும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# இம்மாதம் 27ஆம் திகதி மீண்டும் கூடும் தேர்தல்கள் ஆணைக்குழு




பொதுத் தேர்தல் நிறைவடைந்ததையடுத்து இம்மாதம் 27ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் கூடுகின்றது.

இந்தச் சந்திப்பில் உள்ளூராட்சி தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது, உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் கலந்துரையாடுவதே இந்த சந்திப்பின் முக்கிய நோக்கமெனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்களுக்கான நிதித் தேவையை நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ள இடைக்கால வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டம் டிசம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதுடன் தேர்தலுக்குப் பணம் ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டாலும், தேர்தல் திகதி குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லையெனவும் இந்த கூட்டத்தில் தேர்தல் திகதி குறித்து முடிவு எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# பொருளாதார மீட்சி வேலைத்திட்டத்தில் நாணய நிதியம் சமநிலையான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும்

## ஜனாதிபதி அநுரகுமார கோரிக்கை

சர்வதேச நாணய நிதியத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு மற்றும் அதன் சிரேஷ்ட தூதுக்குழு தலைவர் பீட்டர் ப்ரூவர் ஆகியோர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் புதிய அமைச்சர்கள் குழுவை நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, தனது அரசாங்கம் பெற்ற மக்கள் ஆணையுடன் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படத் தயாராக இருப்பதாக மீண்டும் உறுதிப்படுத்தினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவினர், தீர்மானகரமான தேர்தல் வெற்றிக்கு ஜனாதிபதி மற்றும் அணியினருக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், புதிய அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்பட எதிர்பார்ப்பதாக தெரிவித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் வெற்றியானது தற்போதுள்ள ஆட்சியின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதில் தங்கியுள்ளது என வலியுறுத்திய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, மக்கள் ஆணைக்கு அமைய செயற்படுவது தமது ஆட்சியின் பொறுப்பு எனவும் வலியுறுத்தினார்.

மக்களின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு சமநிலையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் கோரிக்கை விடுத்தார். தனது தலைமையின் கீழ், சிறுவர் வறுமை மற்றும் போசாக்கின்மை போன்ற அத்தியாவசிய நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பதையும் சமூக சேவைகளுக்கான ஒதுக்கீடுகள் திறம்பட பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்தார்.

கடந்த காலங்களில் சமூக சேவை செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டதுடன், வளங்களை வினைத்திறனான ஒதுக்கீடு மற்றும் பாவனையை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தனர்.

நாட்டை ஆட்சி செய்வது மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவது குறித்து இங்கு முக்கியமாக ஆராயப்பட்டது. மக்கள் வழங்கிய ஆணையின் முக்கிய அம்சமான ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் தானும் தனது அரசாங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

அந்த செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் வகையில், சட்டமியற்றும் மற்றும் ஏனைய நிறுவனரீதியான கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு தமது அரசாங்கம் கடுமையான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சர்வதேச நாணய நிதிய குழுவிடம் தெரிவித்தார்.

இந்த சந்திப்பு அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பில் ஒரு சாதகமான முன்னேற்றத்தைக் குறிப்பதோடு அதன் ஊடாக பொருளாதார மீட்சி மற்றும் நீண்டகால ஸ்திரத்தன்மைக்கான ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கான அடித்தளத்தை அமைக்கிறது.

இக்கலந்துரையாடலில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும், தொழில் அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் நிதியமைச்சின் பிரதிநிதிகளும் இணைந்து கொண்டனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024



“நாகரிகத்தின் வேர் காடுகளத்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது.”

- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்தார் எனத் தெரிகின்றது.

தலைமைப் பதவியை ராஜினாமாச் செய்து விட்டார் என அறிவித்திருந்த அவர், நேற்று முன்தினம் மேற்படி அரசியல் குழு தேசியப் பட்டியல் எம்.பி. குறித்துத் தீர்மானிப்பதற்காகக் கூடியதும், கூட்டத்தின் தலைவர் பதவிக் கதிரையில் தாமே வந்து அமர்ந்து கொண்டார்.

மேற்படி ராஜினாமா கடிதத்தை மாவை சேனாதிராஜா சிறிதரனுக்கு முகவரியிட்ட அதேசமயம் செயலாளர் சத்தியலிங்கத்திற்கும் அதன் பிரதியைக் குறிப்பிட்டு அனுப்பி வைத்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

தலைவரின் ராஜினாமாக் கடிதம் முறையாக செயலாளருக்கு முகவரியிட்டு அனுப்பப்படவில்லை. ஆயினும் தேர்தல் காலத்தில் அந்தக் கடிதப் பிரதி கிடைக்கப்பெற்றதால் அது தொடர்பில் தாம் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் விடயங்களைத் தள்ளிப் போட்டார் என நேற்று முன்தினம் அரசியல் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த செயலாளர் சத்தியலிங்கம், இப்போது தேர்தல் முடிந்து விட்டமையால் அந்தக் கடிதம் தொடர்பில் தொடர் நடவடிக்கைகளை தாம் எடுக்கவிருக்கிறார் எனக் கூட்டத்தில் அறிவித்தார்.

அதன்படி, இந்த கடிதத்தின் பிரகாரம் தலைவர் பதவியில் நீங்கள் இருக்கிறீர்களா அல்லது இல்லையா என்பதை தெளிவு படுத்துங்கள் என்று பதிவுத் தபால் மூலம் மாவை சேனாதிராஜாவிடம் செயலாளர் விளக்கம் கோருவார் எனத் தெரிகிறது. அத்தகைய கடிதம் ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டதாகவும் ஒரு தகவல் தெரிவித்தது.

தலைவர் பதவியில் இருந்து கொண்டு அப்பதவிக்குரிய தகைமை நிலையை இழந்த ஒருவராக மாவை சேனாதிராஜா தமிழரசுக் கட்சிக்குள் பார்க்கப்படுகிறார். கடந்த பத்துப் பன்னிரண்டு வருடங்களாக கட்சியின் தலைவராக இருந்து, தமது சுயநலனை முன்னிறுத்திய செயற்பாடுகளினால் தமிழர்கள் மத்தியில் அந்தக் கட்சியின் தனித்துவத்தைக் கெடுத்ததைத் தவிர, அவர் வேறு எதுவும் உருப்படியாகச் செய்யவில்லை எனக் கட்சியின் பல வட்டாரங்களும் குறை கூறி வருகின்றமை தெரிந்ததே.

\+ \+ \+

காஸ் சிலிண்டர் கூட்டணியின் தேசியப் பட்டியல் எம்.பியாக ரவி கருணாநாயக்கா நியமிக்கப்பட்ட விடயம் கட்சிக் கூட்டணிக்குள் பெரும் குத்துவெட்டாகக் களேபரத்தை ஏற்படுத்தி இருப்பதாக அறிய வருகிறது. கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல் இந்த நியமனம் ஒருதலைப் பட்சமாக முன்னெடுக்கப்பட்டு இருப்பதாக குற்றச்சாட்டப்படுகிறது. இந்த விவகாரம் நீதிமன்றத்துக்கு சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

\+ \+ \+

தேசிய மக்கள் சக்தி அரசு தமது நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஆரம்பித்து சுமுகமாகக் கொண்டு நடத்துவதற்கு ஆரம்பத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கப் போகின்றது என்பது திண்ணம். நாடாளுமன்ற சரித்திரத்தில் முதல் தடவையாக தேசிய மக்கள் சக்தி, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்ற தனி கட்சி என்ற அந்தஸ்தை எட்டியிருக்கின்றது. அது மாத்திரமல்ல. இந்த நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமானோர் புது முகங்கள். இது நாடாளுமன்ற சரித்திரத்தில் ஒரு முக்கிய விடயம்.. அதிலும் ஆளும் தரப்பில் பெரும்பாலானோர் புதிய முகங்கள்.

தேசிய மக்கள் சக்தி தரப்பில் தெளிவான 159 உறுப்பினர்களின் 150 பேர் வரை புதியவர்கள். நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள், நடைமுறைகள், விதிமுறைகள், ஒழுங்குகள், செயற்பாடுகள் பற்றி முன் அனுபவம் இல்லாதவர்கள். இத்துணை எண்ணிக்கையில் அனுபவம் இல்லாதவர்களை வைத்துக் கொண்டு நாடாளுமன்ற நாளாந்தக் கடமைகளை முன்னெடுப்பது மிக சிரமமான விடயம். இதனால் இவர்களுக்கு நாடாளுமன்ற அமர்வுக்கு முந்திய பயிற்சிகளை – நாடாளுமன்ற விவகாரங்களை எப்படி அணுகி எதிர்கொள்வது என்பதை விளக்கும் விதத்தில் – மூன்று நாள் வகுப்பெடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று முதல் நாடாளுமன்றத் தொகுதியில் இடம் பெறும் அதே சமயம், புதிதாகத் தெரிவான எம்.பிக்களுக்கு நாடாளுமன்ற நடவடிக்கைகளை விளக்கி வகுப்பெடுக்கும் விரிவுரைகளும் மூன்று நாள்களுக்கு தொடர்ந்து நடைபெற இருக்கின்றன. முன்பின் நாடாளுமன்றத்தையே கண்டறியாத 150 க்கும் அதிகமான புதிய முகங்களை வைத்துக்கொண்டு அரசை ஆரம்பத்தில் வழி நடத்துவது நெருக்கடியான விடயமாகத்தான் இருக்கும். நாட்டின் பொருளாதார நெருக்கடி, அரசியல் நிர்வாகம் போன்ற சிக்கல்களை எதிர்கொள்ள முன்னர், இத்துணை எண்ணிக்கை புதிய உறுப்பினர்களை வைத்துக்கொண்டு நாடாளுமன்றத்தை ஒழுங்கு முறையாக நடத்துவதில் ஆளும்தரப்பு நெருக்கடிகளை எதிர்கொள்ளப் போகின்றது என்பது தவிர்க்க முடியாத சிக்கல்தான்...!

---

## நாலரைக் கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் இருந்து கடல் வழியாகக் கடத்திச் செல்லப்பட்ட தங்கம், இராமேஸ்வரம் வழியாக வாகனம் ஒன்றில் கடத்திச் செல்ல முற்பட்ட சமயமே சிக்கியுள்ளது.

தங்கத்தை கடத்திச் சென்ற இருவரையும் கைது செய்த இந்திய மத்திய அரசின் சுங்கத்துறையின் புலனாய்வு அதிகாரிகள், மீட்கப்பட்ட தங்கத்தையும் கைது செய்தவர்களையும் மதுரைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

பிடிபட்ட தங்கத்தின் பெறுமதி இலங்கை நாணயத்தில் 10 கோடி ரூபா பெறுமதி எனத் தெரிவிக்கப்படுகின்றது.

---

## கற்கோவளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாலையில் இருந்து முகாமை அகற்றும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கற்கோவளம் கடற்கரையுடன் அண்டிய பகுதியில் அமைந்துள்ள இந்தக் காணி மூன்று சகோதரர்களுக்குச் சொந்தமானது.

இந்தக் காணியை இரண்டு தடவைகள் இராணுவ முகாமுக்காகச் சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் மற்றும் சிவாஜிலிங்கம் அணியினர் காணி உரிமையாளர்களுடன் இணைந்து போராடி அளவீட்டுப் பணியைத் தடுத்து நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒடுக்கப்பட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள எல்லையற்ற அதிகாரத்தைப் பொறுப்புடன் கையாள வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

"எமது வெற்றி மகத்தானது. வெற்றியினால் எமக்கு வழங்கப்பட்ட பொறுப்பின் எடை அதே அளவானது. அதற்காக நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்." – என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தேசிய மக்கள் சக்தி அரசின் புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

"குறிப்பாக இலங்கை அரசியலில் மிகவும் முக்கியத்துவமான திருப்புமுனை செப்டெம்பர் 21 ஆம் திகதி நிகழ்ந்தது. நீண்ட காலமாக எமது நாடு பயணித்த பாதையை மாற்றியமைப்பதற்கு மக்கள் செப்டெம்பர் 21 ஆம் திகதி தீர்மானம் எடுத்தனர். அதன் பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் செப்டெம்பர் 21 ஆம் திகதி எடுத்த தீர்மானத்தை மேலும் பலப்படுத்துவது தொடர்பில் எம் மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

இந்த மாற்றத்துக்காக எமது நாட்டு மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இலங்கை வரலாற்றில் எப்பொழுதும் வடக்குக்கு எதிராக தெற்கு அரசியலும் தெற்குக்கு எதிரான வடக்கு அரசியலும்தான் அரசியல் வரைபடத்தில் பொதிந்திருந்தது. அல்லது ஒவ்வொரு மக்கள் குழுக்களிடையில் சந்தேகம் அவநம்பிக்கை, குரோதம் என்பவற்றை தூண்டும் அரசியலே காணப்பட்டது.

ஆனால், இந்தத் தேர்தல் முடிவுகள், இனியும் எமது நாட்டுக்குப் பிரித்தாலும் அரசியல் செல்லுபடியற்றது என்பதைக் காட்டுகின்றது.

வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை ஒரே மையப்புள்ளியில் இணைக்க இந்தத் தேர்தலால் முடிந்துள்ளது. அதற்காக தேசிய மக்கள் சக்திக்குப் பலம் வாய்ந்த மக்கள் ஆணையை வழங்குவதற்காக ஆர்வம் காட்டிய அர்ப்பணித்த அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

அதே போன்று எமக்கு வாக்களிக்காமல் வேறு கட்சிக்கு வாக்களித்தாலும் நாம் எதிர்பாக்கும் பணிகள் மற்றும் நோக்கங்கள் அவர்களினதும் நோக்கமாகும் என்பது திண்ணம்.

பிரித்தாலும் அரசியலை எந்தப் பிரஜையும் விரும்புவார்கள் என நான் நினைக்கவில்லை. ஜனநாயகத்தை முடக்குவதை எந்த அரசியல்வாதியும் விரும்புவர் என்று கருதவில்லை. இவ்வாறான சாதகமான விடயங்கள் அனைத்து பிரஜைகளின் மனங்களிலும் பொதிந்துள்ளது.

எமக்கு வாக்களித்தவர்கள் சாதகமான விடயத்தை தேர்தலின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர். எமக்கு வாக்களிக்காதவர்களிடமும் எமது எதிர்பார்ப்புகள் உள்ளன என நாமும் முழுமையாக நம்புகின்றோம். எனவே, இனியும் இந்தத் தேர்தலில்

06

## ஒடுக்கப்பட்ட.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மகிழ்ச்சி அடையும் குழு மற்றும் இந்தத் தேர்தலினால் விரக்தியடைந்த குழு என இரண்டு குழுக்கள் நாட்டில் இல்லை.

தேசிய மக்கள் சக்தியின் மூலம் இந்த நாடு விரும்பிய இலக்குகளை அடைவதற்கு இந்த மக்கள் அனைவரின் ஆதரவும் நம்பிக்கையும் எங்களுக்குத் தேவை. எனவே, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னரும், இந்த நாட்டில் ஜனநாயகத்தை எவ்வாறு அமைதியான முறையில் நிலைநிறுத்துவது, மற்றவர்களின் அரசியல் உரிமைகளை எவ்வாறு மதிப்பது என்பதை நாம் தேர்தல் முடிவுகளின் பின்னர் காட்டியுள்ளோம்.

இந்த நாட்டு மக்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாக நான் கருதுகின்றேன். ஆனால், அந்த அனுபவம் நம் நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எதிர்பார்க்கும் அனுபவம் என்று நாங்கள் கருதுகின்றோம். அத்துடன், பொதுத் தேர்தலின் பின்னரும், தேர்தல் காலத்திலும் இலங்கை வரலாற்றில் மிகவும் அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு எமது ஆட்சியில் வாய்ப்பளிக்கப்பட்டது. அது அவர்களின் உரிமையாகும். அத்துடன், இத்தேர்தல் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தலாகும்.

இத்தேர்தலில் பல தனித்துவங்கள் உள்ளன, அளவு ரீதியாக நோக்கினால் , இலங்கை வரலாற்றில், பொதுத் தேர்தலொன்றில் கிடைத்த மிகப்பெரிய வெற்றி இது. அரசியல் கட்சியென்ற ரீதியில் பெற்ற பாரிய வெற்றியாகும்.

தேர்தல் வரலாற்றில் ஓர் அரசு அடைந்த முதல் வெற்றியாகும். மறுபுறம், இது மக்கள் மகிழ்ச்சியடையக் கூடிய வெற்றியாகும். அவ்வாறான வெற்றியொன்று நமக்கும் நமது குடிமக்களுக்கும் எப்படி கிடைத்தது. நம் நாட்டிற்கு அந்த மாற்றங்கள் தேவை.

நமது நாட்டுக்கு பல்வேறு வகையான வெற்றிகள் கிடைத்த போதெல்லாம், நமது பொதுவான இயல்பு தோல்வியுற்றவரின் அல்லது மற்ற தரப்பினரின் மனதை நோகடிக்கும் மற்றும் காயப்படுத்தும் வரலாற்றைக் கண்டுள்ளோம். ஆனால், இந்தத் தேர்தலின் பின்னர் நிரந்தரமாக புதிய அரசியல் கலாசாரத்தை எமது நாட்டுக்கு உருவாக்கியுள்ளோம். பொதுத் தேர்தலுக்குப் பிறகு, அதனை தொடர்ச்சியாக நாங்கள் பாதுகாத்துள்ளோம்.

சம்பவங்கள் நடக்கலாம். மற்றொரு கட்டத்தில், அமைதியான ஜனநாயகம் இருக்கலாம். மற்ற சமயத்தில், மோதல் நிலைமை இருக்கலாம். ஆனால், அவை மீண்டும் மீண்டும் நிகழும்போது மட்டுமே அது சரி செய்யப்படுகின்றன. எனவே, இந்த ஜனநாயகத்திற்காக நாம் திறந்துள்ள கதவுகளும், பொதுமக்களுக்கிருக்கும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நமது கடமையும் ஓரிரு சந்தர்ப்பங்களுக்கு மட்டுப்படுத்தினால் அவை வெறும் நிகழ்வுகளாக மாறிவிடும்.

ஆனால், அதனைத் தொடர்ச்சியாகப் பேணினால் அவை வெறும் சம்பவங்களாக மாறிவிடாது. எனவே, இந்த ஜனநாயகத்தில், குடிமக்களின் உரிமைகளைத் தொடர்ந்து பாதுகாத்து, அவர்களை உயர்த நிலைக்குக் கொண்டு வருவது நமது பொறுப்பாகும் . இது அரசின் முக்கியமான பொறுப்பு என்று நான் கருதுகின்றேன்.

குறிப்பாக இந்தத் தேர்தல் பிரசாரத்தில் வெளிநாளில் வாழும் இலங்கையர்கள் எமக்கு மிகுந்த உற்சாகத்தையும் தைரியத்தையும் கொடுத்தனர். தேர்தல் வரலாற்றில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தேர்தலில் அதிக ஆர்வம் காட்டிய மற்றொரு சந்தர்ப்பம் இருக்கின்றது. அந்தச் சந்தர்ப்பத்தை மிஞ்சும் வகையில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் தலையீடும் பங்களிப்பும் செயற்பாடும் இத்தேர்தலில் கொடுக்கப்பட்டதாகவே கருதுகின்றேன்.

அவர்கள் இலங்கைக்கு வெளியில் இருந்தாலும் இந்தத் தேர்தல் முடிவுகளை மிகுந்த மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடியதை நாம் அறிவோம். அவர்களுக்கு நாம் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பொதுவாக தேர்தலின்போது அரசியலின் மிக முக்கியமான பகுதி நமது கருத்தையும் நிலைப்பாடுகளையும் சமூகத்திற்கு எடுத்துச் செல்வது என்பதை நாம் அறிவோம். அதனைச் சமூகத்திற்குக் கொண்டு செல்வதில் ஓர் அரசியல் இயக்கமாக நாங்கள் சில பணிகளைச் செய்தோம். சமூக ஊடகங்களில் அந்தப் பொறுப்பை தானாக முன்வந்து முன்னெடுத்த புதிய தலைமுறையொன்றும் இருந்தது. அந்த இளம் தலைமுறையினரின் விசேட எதிர்பார்ப்புகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சமூக வலைத்தளங்களில் வெறும் பந்தயம், போட்டி, வெற்றி தோல்வியைப் பகிர்ந்து கொள்ளும் போட்டி என்பன வெளிப்படுத்தப்படவில்லை. இது புதிய இளைஞர் தலைமுறையின் எதிர்பார்ப்புகளையும் இலக்குகளையும் வெளிக்காட்டியது. எனவே, நாம் அதற்குக் கடப்பட்டுள்ளோம். அது முக்கியமானது என்று நான் கருதுகிறேன். எனவே, இந்த வெற்றியை அடைய பல்வேறு வழிகளில் உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆனால், நாம் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு விடயம் இருக்கின்றது. பெரும் நம்பிக்கையுடன் இந்த மக்கள் எழுச்சி பெற்றதன் இரகசியம் என்ன? நீண்டகாலமாக எமது நாட்டுக் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வந்தனர். நம் நாட்டின் குடிமக்கள் சட்டத்தின் முன் அநாதரவாகவும் ஒடுக்கப்பட்டும் இருப்பது வழமையான காட்சியாகும். மேலும் பொருளாதார ரீதியில் புறக்கணிக்கப்பட்ட ஒரு குழுவினர் உள்ளனர். பொருளாதாரத்தில் அவர்கள் மனிதத் தூசியாகி விட்டனர். போதிய உணவின்றி, சரியான வீடின்றி, ஆரோக்கியமாக வாழ வாய்ப்பில்லாமல் பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் குழுவொன்று உள்ளது.

மேலும், அவர்கள் தங்கள் அறிவையும் திறனையும் தங்கள் ஈடுபட்டுள்ள தொழிலில் சுதந்திரமாகப் பயன்படுத்த முடியுமா? எனவே தொழில் வல்லுநர்கள் தங்கள் தொழில்துறையில் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அழுத்தங்களை எதிர்கொண்டனர் . மேலும், தாம் பேசும் மொழியின்படி, பின்பற்றும் மதத்தின்படி, அவர்களின் கலாசாரத்தின்படி ஒதுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டம் இருந்தது. எப்போதும் தாம் இலங்கையில் தனிமைப்படுத்தப்பட்டதாக நினைக்கின்றார்கள். அவர்கள் இலங்கையில் ஒதுக்கப்பட்ட மக்கள் என்று நினைக்கின்றார்கள். அவர்கள் இலங்கையில் சம உரிமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பதிலாக, உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்ட மக்கள் குழுவென கருதுகின்றார்கள். எனவே, அத்தகைய துன்புறுத்தல் இருந்தது.

ஒவ்வொரு துறையிலும் உள்ள மக்கள் குழுக்களை அவதானித்தால், அவர்களுக்கே உரித்தான, அவர்களுக்கே தனித்துவமான பல அடக்குமுறைகளை பொதுமக்கள் எதிர்கொண்டனர். சட்டத்தை அமுல்படுத்த முயலும் அரச அதிகாரிகள் இந்த அடக்குமுறைக்கு பலியாகி இருப்பதை நான் அறிவேன். அதுதான் உண்மை நிலை.

எனவே, இந்தத் தேர்தல் முடிவுகள் ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரத்தின் அழைப்பாகும். அவர்கள் இந்தச் சுதந்திரத்தை எதிர்பார்த்தனர். இந்த பல்வேறு வழிகளிலுமான அடக்குமுறைகளில் இருந்து அவர்கள் விடுபட வேண்டும். இந்தத் தேர்தல் முடிவு சுதந்திரத்தின் அவசியத்தை எடுத்துரைக்கின்றது. அந்தக் குடிமக்களுக்குக் கிடைக்கும் சுதந்திரத்தை மட்டுப்படுத்த எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. எனவே, ஒவ்வொரு துறையிலும் முழு சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டும்.

தொழில் வல்லுநர்களாகிய நாம் அவர்களின் அறிவுக்கு ஏற்ப தங்கள் பங்கை சரியாகச் செய்ய வழங்கப்படும் சுதந்திரம், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரிகளுக்கு அவர்களின் பங்கைச் செய்ய நாம் வழங்கும் சுதந்திரம், பொருளாதாரத்தில் நியாயமான பங்கைப் பெறுவதற்கு நாம் வழங்கும் சுதந்திரம், தமது மதம், மொழி மற்றும் கலாச்சாரத்தின் படி நாம் வாழ்வதற்கான உரிமை போன்ற அனைத்தையும் நாம் மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும். அதனால்தான் இலங்கையை மறுமலர்ச்சி யுகத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கூறுகிறோம்.

இந்த நாட்டு மக்களுக்கு இதனை விட சுதந்திரமான சூழலை உருவாக்க வேண்டும். இந்த வெற்றியை அடைவதில் பொது மக்களின் பெரும் ஈடுபாடு இருந்ததை நாம் அறிவோம். எங்களுடைய அரசியல் இயந்திரத்துடன் தொடர்பில்லாத, எங்களைச் சந்திக்காத, எங்களுடன் கதைக்காத, ஊர், இடம் தெரியாத ஏராளமான மக்கள் எங்களுக்காகப் பாடுபட்டனர். பஸ்ஸில், ரயிலில், பணியிடத்தில், நிகழ்வுகளில் எங்கள் வெற்றிக்காகப் பெருமளவானவர்கள் பங்களித்தனர். இந்த வெற்றிக்காக நாங்கள் நீண்ட காலமாக போராடினோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பல தசாப்தங்களாக போராடினோம்.

இங்குள்ள பலர் தங்கள் இளமைக் காலத்திலிருந்தே இந்தக் கனவுக்காகப் போராடியதை நான் அறிவேன். இந்தப் போராட்டத்தில், அவர்களின் நேரத்தையும் உழைப்பையும் மட்டுமல்ல, இந்த வெற்றிக்காக அவர்களின் உயிரையும் கூட தியாகம் செய்தனர். அது மட்டுமின்றி, ஆரம்பத்தில் மிகவும் கடினமான சந்தர்ப்பங்களில் இந்த இயக்கத்தைப் பாதுகாக்க தலையிட்டோம். சிலர் நடுவழியில் சென்றுவிட்டனர். பாதியில் விட்டு சென்றாலும், இந்த வெற்றியை அடைவதற்கு, ஆரம்பத்தில், நடுவில், எந்த கட்டத்திலும் எங்களுக்கு ஆதரவு வழங்கினர். அவைகளும் இந்த வெற்றிக்கு பெரும் உதவியாக இருந்தது.

எனவே, எங்களுக்கு இரு வகையான பொறுப்புகள் உள்ளன. ஒன்று பொது மக்களின் இலக்குகள் மற்றும் அபிலாஷைகளுக்கான பொறுப்பு. இரண்டாவது இயக்கம் தொடர்பான பொறுப்பு. அதிகாரம் என்பது மிகவும் விசேடமான ஒன்று என்று நாங்கள் கருதுகின்றோம். அதிகாரத்தில் இருந்து அதிகாரம் பிறப்பிக்கப்படுகின்றது.

07

# பஸ்ஸின் மிதிபலகையிலிருந்து கீழே வீழ்ந்த நடத்துநர் உயிரிழப்பு

கடுவலை – கொள்ளுப்பிட்டி வீதியில் கொஸ்வத்த சந்திக்கு அருகில் பயணித்த இ.போ.சவுக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் மிதிபலகையிலிருந்து கீழே தவறி வீழ்ந்து பஸ் நடத்துநர் உயிரிழந்துள்ளதுடன் பயணி ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி இருவரும் பஸ்ஸின் பின்புறத்திலுள்ள மிதிபலகையில் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரென பஸ்ஸின் மிதிபலகையிலிருந்து கீழே தவறி வீழ்ந்துள்ளனர்.

பஸ் நடத்துநர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.



நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒடுக்கப்பட்ட.....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

அதிகாரத்தில் இருந்து அதிகாரம் விரிவுபடுத்தப்படுகின்றது. அதிகாரத்தில் இருந்து மேலும் அதிகாரம் வளர்கின்றது. ஆனால் சிலர் அதிகாரத்தை மோசடி என்று கூறுகின்றனர். அந்த எல்லையற்ற அதிகாரமானது எல்லையில்லாத அளவு மோசமானது என்கிறார்கள். அது நிரூபிக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் இதுபோன்ற அதிகாரங்கள் உருவாக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனால், அந்த அதிகாரங்களின் இறுதி முடிவை எடுத்துக் கொண்டால், அவை மக்களுக்கு நியாயமான பெறுபேறுகளை கொண்டு வரவில்லை. அந்த அதிகாரங்கள் எப்போதும் நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராகவே பயன்படுத்தப்பட்டன. எல்லையில்லா அதிகாரம் கிடைத்திருப்பதால் அந்த எல்லையற்ற அதிகாரம் நம்மை எங்கே தள்ளும் என்ற சந்தேகம் சமூகத்தில் உருவாக்கி இருக்கிறது.

கொஞ்சமாவது சந்தேகம் கொள்ளும் அனைவருக்கும், நாம் சொல்வது ஆம் எமக்கு அதிகாரம் கிடைத்திருப்பது உண்மை தான். ஆனால் இந்த அதிகாரத்தின் எல்லைகளையும், இந்த அதிகாரம் நமக்குக் கையாளக் கொடுத்துள்ள எல்லையின் அளவையும் நாங்கள் அறிவோம். அதிகாரம் இருக்கின்றது. ஆனால் அந்த அதிகாரத்திற்கு நமக்கு வரம்புகள் உண்டு. நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அந்த அதிகாரத்தில் ஒரு நோக்கம் இருக்கின்றது. மக்களுக்கு வழங்கப்பட்ட நல்ல இலக்குகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் பொறுப்பு நீண்ட காலமாக அந்த அதிகாரத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக இந்த அதிகாரத்துடன் பொறுப்பும் இருக்கிறது. யாருக்கு? ஒருபுறம், குடிமக்களுக்கான பொறுப்பு. மறுபுறம் இயக்கத்திற்கான பொறுப்பு. எனவே, சட்டங்கள் மற்றும் அரசமைப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் எங்களுக்காக எந்த வகையான அதிகாரத்தை உருவாக்கினாலும், இந்த அதிகாரத்தை நாம் கையாள்வதில் நாம் பொறுப்புக் கூற வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

எமக்குப் பொறுப்பு உள்ளது. பிணைப்பு இருக்கின்றது. எனவே, ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கு ஒரு சாதாரண குடிமகனை விட பாரிய பொறுப்பு உள்ளது. உங்களுக்கெல்லாம் அது புரியும். நான் புதிதாக எதுவும் சொல்ல வேண்டியதில்லை. உங்களிடம் அந்த வரம்புகள் உள்ளன. உங்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது. உங்களிடம் ஒரு பிணைப்பு உள்ளது. அதனைப் பாதுகாப்பீர்கள் என்று நம்புகின்றேன். மேலும், இங்கு அமைச்சரவைக்கு மாத்திரமன்றி நாடாளுமன்றத்துக்கும் பலர் புதியவர்கள். ஆனால், நாங்கள் வெவ்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு துறைகளில் நீண்ட காலமாக பணியாற்றியுள்ளோம். நீங்கள் ஒரு தொழிற்துறையைப் போலவே வேகமாக பணியாற்றியிருக்கிறீர்கள். அரசியல் செயற்பாட்டாளராகப் பணியாற்றியுள்ளீர்கள். எனவே, நீங்கள் அனைவரும் அமைச்சரவைக்கு புதியவர்கள், நாடாளுமன்றத்திற்கு புதியவர்கள், ஆனால், அரசியலுக்கு புதியவர்கள் அல்ல. பணியாற்றுவதில் புதியவர்களல்ல,

எனவே, இந்த அமைச்சரவையினால் புதுவிதமான முன்மாதிரிகள் பலவற்றை மக்களுக்கு வழங்க முடியும் என்று நினைக்கிறோம். நாடு எதிர்பார்க்கும் சாதனைகளை முன்னெடுக்க இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையால் முடியும் என்று நான் நம்புகிறேன். நாங்கள் சிறப்பாக வழிநடத்தி பாடுபட்டால் அந்த இலக்கை அடையலாம். அதற்கான திறமை உங்களுக்கு இருக்கின்றது. உங்களுக்கு அந்த நோக்கம் இருக்கின்றது. நீங்கள் மோசடியற்றவர்கள். நீங்கள் நேர்மையானவர் என்று தனிப்பட்ட முறையில் நான் அறிவேன். இந்தப் பணியை நிறைவேற்றும் தைரியம் உங்களுக்கு இருக்கிறது.

எனவே, இந்தப் பணியை நேர்மையாகச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. அந்த நம்பிக்கையுடன் தான் நாம் செயல்படுகிறோம். மேலும், ஒரு சமயத்தில் அரசியலில், அரசியல் நோக்கங்களுக்காக இயக்கத்தைக் கட்டியெழுப்ப அதற்காக பங்காற்ற வேண்டியிருந்தது. எங்களிடம் நல்ல நோக்கங்கள் இருந்தன. அந்த நோக்கங்களை அடைவதற்கான அதிகாரத்தைப் பெறுவதற்கு நாங்கள் பாடுபட்டோம். நமது கோஷங்கள், நமது செயல்பாடுகள், இவை அனைத்தும் அதிகாரத்தைப் பெறும் போராட்டத்தின் போக்கில் தான் இருந்தன. நாம் முட்டிமோதி இந்த நாட்டு மக்களுக்கு இந்தத் தேவையை உணர்த்தியுள்ளோம். அதுதான் பெறுபேறு. அரசியல் வெற்றி கிடைத்துள்ளது. எம்மை இனி அரசியல் கோஷங்களால் மட்டும் அளவிடக் கூடாது.

செப்டெம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னரும், நவம்பர் 14 ஆம் திகதிக்கு முன்னரும், எங்கள் கோஷங்களின் அடிப்படையில் தான் எம்மை அளவிட்டார்கள். ஆனால், நவம்பர் 14ஆம் திகதிக்குப் பிறகு, ஆட்சியில் நாம் சிறப்பானவர்களா இல்லையா என்ற காரணிக்கமையவே அளவிடுவர். முன்பெல்லாம் நமது அரசியல் செயற்பாடு நல்லதா கெட்டதா என்பதை வைத்து அளவிடப்பட்டது. இனிமேல் நமது ஆட்சி நல்லது கெட்டது என்ற காரணியால் எம்மை அளவிடுவர்.

எனவே, எமது நீண்டகால முயற்சிகளையும், மக்களின் எதிர்பார்ப்புகளையும், அவர்கள் எதிர்பார்த்த இலக்குகளையும் வெற்றியடையச் செய்வதற்கு

நல்லாட்சி அவசியமாகும். இனியும் நாம் கோஷங்களாலும் சித்தாந்தங்களாலும் அளக்கப்படப் போவதில்லை. இன்றிலிருந்து நமது கோஷங்களுக்கு எவ்வளவு உயிர் கொடுக்க முடிந்துள்ள ஆட்சி என்பதை வைத்து அளவிடப்படுவோம்.

எனவே, எங்கள் வெற்றி பாரியது என்பதோடு வெற்றி ஊடாக ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பின் பாரமும் அதற்கு சமமானது. சில சமயங்களில் வெற்றிக்காக போராடுவோம் என்றும், வெற்றிக்குப் பிறகு திறமையுள்ள குழுக்கள் அடுத்த அடியை எடுத்து வைக்கும் என்றும் எமக்குக் கூறப்பட்டது. ஆனால் நல்லதோ கெட்டதோ வெற்றிக்காக போராட வேண்டியிருந்தது. வெற்றிக்குப் பிறகு அந்தப் பணியில் வெற்றிபெறும் முன்னோடிகளாகிவிட்டோம்.

எனவே, அனைத்தும் உங்கள் மீது தான் சுமத்தப்பட்டுள்ளது. நீங்கள்தான் பிரதானம். உங்களால் எந்த அளவிற்கு உங்கள் துறைகளை திறம்பட நிர்வகித்து உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்ற முடியும்? தனிப்பட்ட போக்குகள், பொறுப்புகள் என்பவற்றை எந்தளவு உங்களால் நிறைவேற்ற முடியும்? இந்த அடிப்படையில் தான் நமது அடுத்த வெற்றி அல்லது தோல்வி தீர்மானிக்கப்படுகின்றது.

செப்டெம்பர் 21 மற்றும் நவம்பர் 14 ஆகிய இரு கட்டங்களிலும் நாம் சித்தியடைந்துள்ளோம். அடுத்து, நாங்கள் சித்தியடைவோமா? இல்லையா? என்பதை தீர்மானிப்பதில் உங்கள் வகிபாகம் பெரியது. சிறந்த ஆட்சிக்கான உங்களின் பொறுப்புக்கூறல் மற்றும் அர்ப்பணிப்பினால்தான் இதனை வெற்றிகரமாக நிறைவு செய்ய முடியும். அதற்காக ஒன்று பட்டு செயற்படுவோம். அதற்காக ஒன்றுபட்டு குரல் கொடுப்போம்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அமைச்சர்களின் பொறுப்பு

ஜனநாயகத்தில், அளவுக்கு அதிகமான - எல்லை மீறிய - அதிகாரமும் ஆபத்தானது.

அதுதான் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் அரசுகளுக்கும் நேர்ந்தது.

ஜனநாயக ரீதியில் எல்லை மீறிக் கிடைத்த அதிகாரங்கள் பெரும் ஊழல், மோசடி, நிதித் துஷ்பிரயோகங்களுக்கு வழி வகுத்த பல அனுபவ பாடங்களை நவீன உலகம் கண்டு வந்திருக்கிறது.

நாடாளுமன்ற ஜனநாயக முறையைச் சுத்தம் செய்யப் போவதாக கூறி ஆட்சியைக் கைப்பற்றி இருக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் கூட இத்தகைய எல்லை மீறிய அதிகாரத்தை - நாடாளுமன்ற ஆணையை - இலங்கை மக்கள் வழங்கி இருக்கிறார்கள்.

பெரும்பாலும் 90 வீதத்துக்கும் அதிகம் புது முகங்களை இந்த ஆட்சி பீடத்திற்கு மக்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். பதவியேற்ற அமைச்சரவையில் அனேகமாக எல்லோரும் - ஒரு சிலரை தவிர - புதிய முகங்கள்.

ஆட்சி நிர்வாக முறைகளில் ஆலோசகர்களினதும் அதிகாரிகளினதும் வழிகாட்டல்களில் அவர்கள் தங்கி இருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. கொள்கை, கோட்பாடு, நிர்வாக விடயங்களில் நேர்மையானவர்களாகவும், ஊழல், மோசடி அற்றவர்களாகவும் இந்த அரசியல்வாதிகள் செயற்பட்டாலும், ஆலோசகர்களாகவும் அதிகாரிகளாகவும் வந்து வாய்ப்பவர்கள் பிழைத்துப் போனால் இந்த அரசியல்வாதிகளின் செல்நெறியும் கூடப் பிழைத்துப் போகும் ஆபத்து உண்டு.

இதேபோன்று, அரசியல் நிர்வாகத்தில் முன்பின் அனுபவம் இல்லாமல், அதீத அதிகாரத்துடன் ஆட்சி பீடத்துக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு நேர்ந்த கதி நாட்டுக்கு நன்கு தெரியும். அந்த ஆட்சி அதிகாரத்தின் கீழ் நடைபெற்ற ஊழல், மோசடிகளுடன் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேரடித் தொடர்பு இருந்ததா என்பது இன்னும் நிரூபிக்கப்படவில்லை. ஆனால் அவரைச் சூழ புதிதாக வந்தமைந்த அதிகாரிகளும் ஆலோசகர்களும் எல்லா விடயங்களையும் மண்ணாக்கிச் சென்றார்கள் என்பது நாட்டின் பட்டறிவு. பி.பி.ஜயசுந்தர மற்றும் நிபுணர்கள், புத்திஜீவிகள் அடங்கிய குழு ஒன்று கூட்டாக ராஜபக்ஷவைச் சூழ இருந்து எல்லா விடயங்களையும் தம் பாட்டில் கையாண்டு, ஆட்சியையே போட்டடிக்க வழி செய்தன. கொவிட் தொற்றுக் காலத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை - ஜனாஸாக்களை - கட்டாயம் எரிக்க வேண்டும் என்ற விதிமுறை ஆலோசனையில் இருந்து, தரம் குன்றிய மருந்து பொருள்கள் இறக்குமதி உட்பட்ட பல்வேறு ஊழல்கள் வரை இடம் பெற்ற முறையற்ற செயற்பாடுகளில் தனித்து அரசியல்வாதிகள் சம்பந்தப்படவில்லை. அவர்களையும் தாண்டி ஆலோசகர்களும் அதிகாரிகளும் இந்த குழப்பங்களில் - முறைகேடுகளில் - முக்கிய பங்காற்றி இருக்கின்றார்கள் என்பது ஓரளவு தெரிந்த விடயம்.

இப்போது அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் தலைவர்களும் இத்தகைய ஆலோசகர்கள், நிபுணர்கள், அதிகாரிகள் என்ற தவறான குழுமங்களின் கைகளில் சிக்குண்டால் - அத்தகைய தரப்புக்களின் வழிகாட்டல்களில் மாட்டிக் கொண்டால் - இந்த அரசும் கூட பழைய அரசுகளின் பெயரையே சம்பாதித்து நிற்கும் என்பது தவிர்க்க முடியாத கட்டாயமாகிவிடும்.

நாடாளுமன்றத்தைசுத்தம்செய்வதாக - ஊழல் அரசியல்வாதிகளை வெளியேற்றுவதாக - தேசிய மக்கள் சக்தி அரசு பிரகடனப்படுத்திக் கொண்டாலும் கூட, அதன் பெறுபேறாக பதவியேற்கும் புதிய அரசு தலைமை மீண்டும் இதே போன்ற ஊழல் அதிகாரிகள் மற்றும் குழப்பக்கார ஆலோசர்கள், நிபுணர்களின் தயவில் தங்கி நின்றால் இந்த அரசின் போக்கும் அதோ கதிதான் என்பதை மறுப்பதற்கில்லை.

தேசிய மக்கள் சக்தியில் இப்போது பதவிப் பொறுப்புகளை ஏற்றிருக்கும் அமைச்சர்கள் பெரும்பாலும் புதிய முகங்கள். அமைச்சு நிர்வாகங்களில் - அரசியல் வழிகாட்டல் வழங்கும் முறைகளில் - அவர்கள் அனுபவம் பெற்றவர்கள் அல்லர். அதனால் ஆலோசகர்கள், அதிகாரிகளின் வழிகாட்டல்களைக் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டிய இக்கட்டு அவர்களுக்கு இருக்கலாம். ஆயினும் இது விடயத்தில் மிகக் கவனமாக அவர்கள் செயற்பட்டால் மாத்திரமே தவறான வழிகாட்டல்களில் சிக்காமல் தப்பிக் கொள்ள முடியும்.



# அ.தி.மு.கவுடன் கூட்டணி என்பது முற்றிலும் அடிப்படையற்ற செய்தி

## த.வெ.க. பொதுச் செயலாளர் ஆனந்த் தெரிவிப்பு

“அ.தி.மு.கவுடன் தமிழக வெற்றிக் கழகம் கூட்டணி அமைக்க இருப்பதாக வெளியாகும் செய்திகளில் உண்மை இல்லை. இது முற்றிலும் தவறானது, அடிப்படை ஆதாரமற்றது.”

– இவ்வாறு அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச் செயலாளர் என். ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாட்டில் கழகத்தின் கொள்கைகள், கொள்கை எதிரி, அரசியல் எதிரி, தேர்தல் நிலைப்பாடு குறித்தும் தமது உரையில் தலைவர் தெளிவாக, விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

அவரது வழிகாட்டுதலின்படி தமிழக வெற்றிக் கழகம், எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதற்கான அனைத்து வியூகங்களையும் வகுத்து, தேர்தலைச் சந்திக்கத் தயாராகி வருகிறது.

இச்சூழலில், 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆட்சி மாற்றத்திற்கான முதன்மைச் சக்தியாக, ஒட்டுமொத்த தமிழக மக்களின் ஏகோபித்த வரவேற்பையும் ஆதரவையும் பெற்று, மக்கள் மத்தியில் தமிழக வெற்றிக் கழகம் அடைந்து வரும் எழுச்சியை மடைமாற்றம் செய்யும் உள்நோக்கத்தோடு, அடிப்படை ஆதாரமற்ற தகவல்களைக் கொண்டு அ.இ.அ.தி.மு.கவுடன் தமிழக வெற்றிக் கழகம் கூட்டணி என்று தொடர்புப்படுத்தி, தமிழ் நாளிதழ் ஒன்று உண்மைக்கு முற்றிலும் புறம்பான தகவல்களைக் கொண்டு தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது. இந்தச் செய்தி, முற்றிலும் தவறானது. ஆதாரமோ அடிப்படையோ அற்றது.

ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக அரசியல் விமர்சகர்கள் என்கிற போர்வையில் உள்நோக்கத்தோடு, தான்தோன்றித்தனமாகச் சிலர் தெரிவிக்கும் பொய்யான கருத்துகளின் அடிப்படையில் தமிழக வெற்றிக் கழகத்தைத் தொடர்புப்படுத்திப் பரப்பப்படும் இது போன்ற உண்மைக்கு மாறான பொய்ச்செய்திகளைத் தமிழக மக்கள் புறக்கணித்து விடுவார்கள் என்பதை இத்தகையப் பொய்யான செய்திகளை உள்நோக்கத்தோடு பரப்புபவர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பாதை, முழுக்க முழுக்கத் தமிழக மக்களின் நலனுக்கானது. வெற்றிக் கொள்கைத் திருவிழாவில் தலைவர் ஆற்றிய உரையில் தெரிவித்த நிலைப்பாட்டின் அடிப்படையில் பெரும்பான்மை பலத்தோடு நாட்டு மக்களின் பேராதரவோடு வென்று தமிழ் நாட்டு மக்களின் நலனுக்கான நல்லரசை அமைப்பதே தமிழக வெற்றிக் கழகத்தின் குறிக்கோள்.

எனவே, மக்களைக் குழப்பும் நோக்கில் தமிழக வெற்றிக் கழகம் தொடர்பாக உண்மைக்குப் புறம்பான கருத்துகளை செய்திகளாக வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தலைவரின் ஒப்புதல் பெற்று இச்செய்திக் குறிப்பு வெளியிடப்படுகிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஆட்சி சிறப்பாக உள்ளதென மக்கள் பாராட்ட வேண்டும்

## சீமான் சாடல்



“ஆட்சியாளர் தன்னுடைய ஆட்சி சிறப்பாக இருக்கிறது என்று கூறினால், அது கொடுமையாக இருக்கிறது என்று அர்த்தம். மக்கள் சொல்ல வேண்டும்.”

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார் .

திருச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழக முதல்வர் தான் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் திராவிட மாடல் ஆட்சி சூப்பர் என்று சொல்வதாக கூறிவருகிறார். என்னுடன் ஒருமுறை வாருங்கள். நானும் ஆய்வுக்குப் போகிறேன். இந்த மனுக்களைக் கொடுத்து விட்டு, கவலை, கண்ணீரோடு மக்கள் கதறுவதை ஒரு முறை கேளுங்கள்.

ஆட்சியாளர் தன்னுடைய ஆட்சி சிறப்பாக இருக்கிறது என்று கூறினால், அது கொடுமையாக இருக்கிறது என்று அர்த்தம். ஆட்சியைப் பற்றி மக்கள் சொல்ல வேண்டும். நாடும், மக்களும், ஏடும் போற்ற வேண்டும். ஏடு போற்றும், வாடகை வாய்கள் பேசும். காரணம் ஆட்சியாளர்களே அனைத்தையும் வைத்துள்ளதால் பேசும். தி.மு.க. அரசின் ஊடகங்கள் போற்றுகிறது. ஆனால், மக்கள் தூற்றுகிறார்கள்.

காசு கொடுத்து மக்களை அழைத்துவந்து வீதியின் இருபுறங்களிலும் மக்களை நிறுத்திவைக்கின்றனர். மக்கள் அவர்களாக வருவதில்லை. இந்த தலைவனின் ஆட்சி சிறப்பாக இருக்கிறது என்று மக்கள் முதல்வரை பார்க்க வருவதில்லை. வரவழைக்கப்படுகின்றனர்.

நாம் தமிழர் கட்சி வரும் தேர்தலில் தனித்துப் போட்டியிடுகிறது. அதற்கான வேலைகள் நடக்கிறது. 2026 இல் நாங்கள் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடுவோம். அதில் 117 பெண்கள், 117 ஆண்களுக்கு வாய்ப்புக் கொடுப்போம். நூறு இளைஞர்கள், இளம்பெண்களுக்கு வாய்ப்புக் கொடுக்க இருக்கிறோம். கூட்டணி என்பது தற்கொலைக்குச் சமம் என்ற கோட்பாட்டைக் கொண்டவன் நான். ”– என்றார்.







# நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு ஜோ பைடன் அனுமதி

ரஷ்யாவைத் தாக்குவதற்கு அமெரிக்கா வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்துவதற்கு அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோ பைடன் அனுமதி வழங்கியுள்ளார்.

அமெரிக்க அதிகாரி ஒருவர் இதனை உறுதி செய்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பல மாதங்களாக, உக்ரைனின் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி, ஏ.டி.ஏ.சி.எம்.எஸ். எனப்படும் ஏவுகணைகள் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகிறார்.

இந்தநிலையில், தற்போது உக்ரைனுக்கு தமது சொந்த எல்லைகளுக்கு வெளியே தாக்குவதற்கு அமெரிக்காவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தமக்கு எதிரான போரில் உக்ரைன் மேற்கத்தேய நாடுகளின் நீண்ட தூரம் தாக்கும் ஏவுகணைகளைப் பயன்படுத்துமாயின் அது நேட்டோ இராணுவ கூட்டணி, நேரடியாகப் போரில் பங்கேற்பதாக அமையும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முன்னதாக எச்சரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் காற்று மாசு உச்சம்: ஒரு மாதத்தில் 19 லட்சம் பேர் பாதிப்பு



பாகிஸ்தானில் காற்று மாசு தீவிரமடைந்துள்ளது. இதனால், மக்களுக்கு மூச்சுப் பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. கடந்த மாதத்தில் மட்டும் 19 லட்சம் பேர் மூச்சுப் பிரச்சினை காரணமாக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக, பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் காற்றின் தரம் மிக மோசமாக உள்ளது. அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக கூட்டம் நிரம்பி வழிவதாக கூறப்படுகிறது.

காற்று மாசுபாட்டால் குழந்தைகளும், வயதானவர்களும் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிற நிலையில், பாடசாலைகளுக்கு விடுமுறை அளித்தல், வாகனப் பயன்பாட்டுக்கு கட்டுப்பாடு விதித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை பாகிஸ்தான் அரசு மேற்கொண்டுவருகிறது.

எனினும், முக்கிய நகரங்களில் காற்று மாசை கட்டுப்படுத்த முடியாத சூழல் நிலவுகிறது. லாகூரில் காற்று தரக் குறியீடு 1000 ஐ தாண்டியுள்ளது. சமீபத்தில் முல்டானில் காற்று தரக் குறியீடு 2,000 ஐ தாண்டியுள்ளது.



# ஹிஸ்புல்லாஹ்வின் ஊடகப் பிரதானி பலி

இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் ஊடகப் பிரதானி மொஹமட் அஃபிப் கொல்லப்பட்டுள்ளார்.

லெபனான் நகரில் உள்ள கட்டடம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது இவர் கொல்லப்பட்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த கட்டடத்தில் ஹிஸ்புல்லாஹ்வின் ஊடகப் பிரதானி மொஹமட் அபிஃப் தங்கியிருந்துள்ளார் எனவும் அவருடன் தங்கியிருந்த மேலும் ஒருவரும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.








# திக்கம் வடிசாலை முன்னாள் அமைச்சரால் சூறையாடல்; 100 மில்லியன் ரூபாவுக்குப் பணப்பரிமாற்றம் நடந்ததாம்

## பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன் குற்றச்சாட்டு

**(கி.வசந்தன்)**

திக்கம் வடிசாலை கடந்த பத்து வருடங்களாக முன்னாள் அமைச்சர் ஒருவரால் சூறையாடப்பட்டுள்ளது. அங்கு பணிபுரிந்த முன்னாள் களஞ்சியசாலை காப்பாளர் துப்பாக்கி முனையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இங்கு நடைபெற்ற அனைத்து மோசடிகளும் விசாரிக்கப்படும் எனப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று வருகை தந்த அவர் நகரப் பகுதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் கீழ் உள்ள கற்பகம் பனை உற்பத்தி பொருள்கள் விற்பனை செய்யும் நிலையத்தை பார்வையிட்டிருந்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தலைவராக பொறுப்பேற்றது முதல் பல்வேறு ஆய்வுகளை செய்து வருகின்றேன். கடந்த காலங்களில் பனை வளம் சார்ந்த விடயங்களை பாதுகாப்பதில் பல்வேறு குறைபாடுகள் உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பனை உற்பத்திசார் தொழிலாளர்களுக்கு உயர்ந்த வருமானத்தை பெற்றுக் கொடுக்கும் சூழ்நிலையில் சபை இல்லை என்ற குற்றச்சாட்டுக்கள் நிலவுகின்றன.

திக்கம் வடிசாலை கடந்த பத்து வருடங்களாக முன்னாள் அமைச்சர் ஒருவரால் சூறையாடப்பட்டுள்ளது. அங்கு பணிபுரிந்த முன்னாள் களஞ்சிய சாலை காப்பாளர் ஒருவர் முறைப்பாடு ஒன்றை எனக்கு வழங்கியுள்ளார். தான் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டு தனது வேலையில் இருந்து விலக்கப்பட்டதாகவும், இன்று வரை நீதி கிடைக்கவில்லை என்றும், தான் உயிரை மாய்க்கும் நிலைக்கு சென்றார் எனவுன் அவர் தெரிவித்திருந்தார்.

அந்த முன்னாள் அமைச்சரின் அதிகாரப் பிடியில் பனை அபிவிருத்திசபை மட்டுமல்ல, வடக்கு மாகாணமும் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்த நிலையில் இப்போது தங்களுக்கு நடந்த அநியாயங்களை வெளிக்கொண்டு வர பலர் துணிந்திருக்கிறார்கள்.

இலங்கையின் மிகப்பெரிய மது உற்பத்தி நிறுவனத்திடம் அந்த தொழிற்சாலை கையளிக்கப்பட்டுள்ளது. பனஞ்சாராய உற்பத்தி ஒன்றும் அங்கு நடந்தது. ஆனால் இது பற்றிய எந்த தகவலும் பொது மக்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. நான் சபையை பொறுப்பெடுத்த பின்னரே அந்த ஒப்பந்தத்தின் பிரதி பனை அபிவிருத்தி சபைக்கே கிடைத்தது. முதல்தகவல் அறிக்கையின் பிரகாரம் கிட்டத்தட்ட 100 மில்லியன் ரூபா நேரடியான பணப்பரிமாற்றம் அந்த இடத்தைக் கைப்பற்றுவதற்காக நடந்திருப்பதாக அறியமுடிகின்றது.

அதனைவிட 2014ஆம் ஆண்டு சபையின் அன்றைய முன்னாள் தலைவரின் அறிக்கையின்படி 69 மில்லியன் பெறுமதியான மதுசாரம் ஆயுத முனையில் கொள்ளையடிக்கப்பட்டாக கூறியிருக்கிறார். அங்கு நடைபெற்றகொள்ளைகள், முறைகேடுகள் மிக அதிகமானவை. இப்போது ஒவ்வொன்றாக விடயங்கள் வெளிவருகின்றன. சாட்சியங்களை சேகரித்து வருகின்றோம். இந்த விசாரணைகளில் யாரும் தப்ப முடியாது.

இந்தத் தொழிலை மீள கட்டுவது சவாலான ஒரு விடயமாக மாறியிருக்கிறது. வடிசாலைகள் தென் இலங்கையை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டு, குருநாகல், புத்தளம் பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படும் தென்னங் கள்ளு இங்கு விற்பனை செய்யப்படுகின்றது. நெடுந்தீவுக்கும் தென்னங்கள்ளை விற்பனை செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பனைவளம் இருந்தும் அரசியல்வாதிகளின் ஊழல் நிறைந்த செயற்பாட்டால் இந்த தொழில் அழிந்து போயுள்ளது. நெடுந்தீவில் பிரதேச செயலாளர் ஒருவரால் சட்டவிரோதமாக கள் உற்பத்தி நிலையம் நடாத்தப்பட்டு தென் இலங்கைக்கு விற்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

பனை வளத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன். பொதுமக்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அத்துடன் 11 மாவட்டங்களில் பனைவளம் உள்ளது. எனவே முழுமையான கணக்கெடுப்பொன்றை செய்ய இருக்கிறோம். அதன் பின்னரே அவற்றை வெட்டுவதற்கு அனுமதி வழங்குவதா என்ற விடயத்தை ஆராயவுள்ளோம்.

பனை மீள் நடுகையின் போது நடந்த மோசடிகளால் நிதி அமைச்சு அதனை இடைநிறுத்தியிருக்கிறது. பனை அபிவிருத்திச்சபை தமது சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்படாத காரணத்தால் அரசாங்கம் அந்த செயற்ப்பாட்டை இடைநிறுத்தியிருந்தது. அதனை மீள செயற்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

பனஞ் சாராயத்தினை ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிகமான வருமானத்தை பெறமுடியும். அதற்கான அனுமதியை எமது சபையே வழங்கும். தனியாக எவரும் செய்யமுடியாது. ஒருசில ஊழல்வாதிகள் மற்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் லஞ்ச மோசடியில் ஈடுபட்டு புதியவர்கள் இந்த தொழிலுக்கு வரவிடாமல் தடுத்துள்ளனர். அவ்வாறான ஒரு விடயத்திற்காக 15 மில்லியன் பணம் வழங்கப்பட்டதற்கான ஆதாரம் கிடைத்துள்ளது. விரைவில் நடவடிக்கை எடுக்க உள்ளோம். ஏற்றுமதியில் ஈடுபடுவதற்கு பலர் விண்ணப்பித்துள்ளனர். அதற்கான கூட்டம் விரைவில் நடக்க உள்ளது. - என்றார்.



# புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட நீதிமன்றம் இடைக்காலத் தடை!

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்படுவதை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் மூன்று வினாக்கள் கசியப்பட்ட சம்பவம் தொடர்பில் பெற்றோர்கள் சிலர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில் இந்த மனு இன்றைய தினம் பிரிதி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.



# லொஹான் ரத்வத்தைக்கும் மனைவிக்கும் பிணை வழங்க நீதிவான் நீதிமன்று மறுப்பு

## தொடர்ந்து விளக்க மறியலில் வைக்க உத்தரவு

பதிவுசெய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை மற்றும் அவரது மனைவி ஷஷி பிரபா ரத்வத்தை ஆகியோரினால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தினால் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், லொஹான் ரத்வத்தையை டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி வரையும் , ஷஷி பிரபா ரத்வத்தையை நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வரையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லொஹான் ரத்வத்தையின் மனைவி ஷஷி பிரபா ரத்வத்தைக்குச் சொந்தமான நுகேகொடை, மிரிஹான பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து பதிவு செய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்று கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி மிரிஹான பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டு நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், லொஹான் ரத்வத்தை மற்றும் அவரது மனைவி ஷஷி பிரபா ரத்வத்தை ஆகியோரினால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# ஜனாதிபதி அடுத்த மாதம் இந்தியாவிற்கு விஜயம்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க டிசம்பர் மாத நடுப்பகுதியில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இடையில் இதன்போது சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.




# நாட்டை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்ல ஐக்கிய மக்கள் சக்தி இடமளிக்காது

## எஸ்.எம். மரிக்கார் தெரிவிப்பு

தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் வழங்கிய மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்திற்கு மதிப்பளிக்கின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போதைய அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்காக நாட்டு மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது.

அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் செயல்பட எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்மட்டத்திற்குக் கொண்டு வந்து நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த, மக்களுக்காக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வதே எதிர்க்கட்சியின் முதன்மை பணியாகும்.

நாட்டை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லவோ, நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கவோ, அல்லது குறுகிய அரசியல் நலன்களின் அடிப்படையில் செயல்படவோ ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் இடமளிக்காது.

ஆனால் அரசாங்கம் தவறான பாதையில் செல்லும் போது, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்றார்.

# விஜித ஹேரத்திற்கு ஜெய்சங்கர் வாழ்த்து



இலங்கையின் வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றுள்ள விஜித ஹேரத்திற்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவத்தை மேலும் வலுப்படுத்த இணைந்து செயற்படத் தயாராக உள்ளதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.


Dr. S. Jaishankar

Felicitations to Foreign Minister of Sri Lanka Vijitha Herath on his re-appointment.

Look forward to working together to further strengthen our historic bonds of friendship and deepen our wide - ranging partnership for mutual benefit.



# நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை

நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதன்படி, மேல், சப்ரகமுவ ஊவா, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளின் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும்.

அதேநேரம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 50 மில்லி மீற்றர் அளவில் மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.




# நவம்பர் 22 மூன்றாம் தவணைக்கான முதல் கட்ட விடுமுறை வழங்கப்படும்

அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் நவம்பர் 22 ஆம் திகதியுடன் நிறைவடைவதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் நவம்பர் 23 ஆம் திகதி முதல் ஜனவரி முதலாம் திகதி வரை பாடசாலைகளுக்கான விடுமுறை வழங்கப்படவுள்ளது.

அத்துடன், மூன்றாம் தவணை கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி வரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# வருட இறுதிக்குள் சுற்றுலாப் பயணிகள் வருகை 2 மில்லியனை அடையும்

இந்த வருட இறுதிக்குள் இலக்கிடப்பட்ட 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை இலங்கை அடையும் எனச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் அருகம்பை பகுதிக்கு விடுக்கப்பட்டிருந்த தாக்குதல் எச்சரிக்கையைத் தொடர்ந்தும் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்திருந்தது.

இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து பல நாடுகள் இலங்கைக்கான பயண ஆலோசனையைப் புதுப்பித்திருந்ததுடன் சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், ஒப்பீட்டளவில் இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகைதந்துள்ள சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகச் சுற்றுலாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 19.11.2024




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும்.குழப்பங்களும் கவலைகளும் நிறைந்திருக்கும்.இன்று சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு உகந்த நாள் அன்று.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணி நிமித்தமான பயணம் இன்று காணப்படும். உங்கள் வேலைகளை திட்டமிடுவது இன்று முக்கியம்.

இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுபடுத்த வேண்டும்.

நிதி நிலைமை நீங்கள் எதிர்பார்த்தது போலன்றி எதிர்மறையான பலன்களைத் தரும்.

உங்களிடம் காணப்படும் பதற்றம் காரணமாக உங்களுக்கு கால் வலி ஏற்படலாம்.




இன்ற உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள். இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடவேண்டும். அது உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். அதே சமயத்தில் வேலையின் தொடக்கத்தில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. துணையிடம் அன்பான உரையாடல்களில் ஈடுபடலாம்.

உங்கள் தேவைகளுக்கு கடன் வாங்க நேரலாம். அதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படலாம். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உணவு முறை மேற்கொள்ளவும்.




இன்று நீங்கள் சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். பொறுப்புகள் காணப்படும்.இன்று செய்யும் செயல்களை சரியாக திட்டமிட்டுச் செய்தால் நீங்கள் வெற்றி காணலாம்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாளாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் துணையிடம் உங்கள் நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கிய பிரச்சினை காணப்படும். அதற்காக செலவு செய்ய நேரும்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை.இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று சாதகமான நாள்.உங்களின் முயற்சி சிறியதாக இருந்தாலும் வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று பணியில் சவால்களும் போட்டிகளும் நிறைந்து காணப்படும்.இந்த சவால்களை திறமையாக சமாளிக்க வேண்டிய நிலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்வது நல்லது.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.




இன்று நீங்கள் பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். புதிய முயற்சிகள் எடுத்து அதில் வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மனநிலையில் இருப்பீர்கள்.

இன்று பணி நிமித்தமான பயணம் காணப்படும். உங்கள் பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விடாப்பிடியான எண்ணம் கொண்டு எந்த முயற்சியும் செய்யாதீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உறவில் நல்லிணக்கம் இருக்கும்.

இன்று அதிர்ஷ்டம் காணப்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உணவில் கவனம் செலுத்த வேண்டும். உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.11.2024




இன்று மந்தமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாளாக அமையாது. முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தள்ளிப் போட வேண்டும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டத் தக்க வகையில் இருக்காது. பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்ளவும். இதனால் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைக்க முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. இன்று வரவும் செலவும் சேர்ந்து காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். உரையாடலின் போது கவனமாக இருங்கள். பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம். உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று காதலில் முழு திருப்தி உண்டாவதற்கு உகந்த நாள். இன்று காதலில் புதிய அத்தியாயத்தை தொடங்குவீர்கள்.

நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால் இன்று அதிக லாபம் கிடைக்கும்.

நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். உடற்பயிற்சி மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியையும் மன ஆறுதலையும் தரும்.

பணி நிமித்தமான பயணங்கள் இன்று காணப்படும். பணியில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு பொருத்தமான நாளாக உணர்வீர்கள். உங்கள் காதலை உங்கள் தந்தையிடம் கூறுவீர்கள். அது உங்களுக்கு சாதககமாக இருக்கும்.

ஏழைகளுக்கு தொண்டு செய்து அவர்கள் ஆசி பெறுவதன் மூலம் உங்களுக்கு நற்பலன்கள் கிடைக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.





